ஒத்தமை நற்செய்தி புத்தகங்களில் பாலைநிலத்தில் கிறிஸ்துவின் சோதனை பற்றி புனித மாற்கு எழுதிய வாசகம் மிகவும் குறுகியது. ஆனால் மீட்பரின் வாழ்வின் இந்த முக்கியமான நிகழ்வின் சாரமும் மகத்துவமும் குறையவில்லை. மனந்திரும்பி விசுவாசம் கொள் என்ற அறைகூவலுடன், தம்மை சோதிக்க வந்தவரிடமிருந்து இயேசு கடந்து செல்கிறார். சாத்தானின் சூழ்ச்சியையும் தந்திரத்தையும் முறியடித்த மனிதனான பாலநிலத்திலிருந்து அவர் வெளியேறுகிறார். இது, நமது காலம் வரை எதிரொலிக்கும் செய்தியாக இருந்து வருகிறது. குறைக்கூறும் அல்லது குற்றஞ்சாட்டும் செய்தி அல்ல, மாறாக முறியடிக்கப்பட்ட சாத்தானுக்கும் அதன் தீயத் தந்திர சூழ்ச்சிக்கும் அனுதாபம் தெரிவிக்கும் செய்தி. ஏனெனில் அவற்றின் சதுரியமான தந்திரங்களை ஆண்டவரே அறிவார்.

பாலைநிலத்திலிருந்து அவர் வருவது, நமக்கு தீர்ப்பளிக்க அல்ல மாறாக மீட்பு அளிக்க. தவக்காலத்தில் அவரது அழைப்பு, தவக்காலத்திற்கு மட்டுமல்ல, நமது வாழ்நாள் முழுவதும் விடுக்கப்படும் அழைப்பு: மனந்திரும்பி, பாவத்திலிருந்தும் சாவிலிருந்தும் மீட்பு அளிக்கும் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளுங்கள்.

என்னிடம் திரும்பி வாருங்கள், மீட்பு பெறுவீர்கள் – என்பதே ஆண்டவர் இன்று விடுக்கும் செய்தி. அது அவ்வளவு எளிதானது. நாம் ஒவ்வொருவரின் பாவத்தையும் அவர் அறிவார், அதனை அவர் கணக்கில் வைத்துக் கொள்ள மாட்டார். நம்முடைய ஒவ்வொரு பாவத்தையும் பட்டியலிடுவதில்லை. நீங்கள் இருப்பது போல் வாருங்கள்; உங்கள் பாவங்களுக்கான தண்டனையை ஏற்கனவே நாம் சுமந்து கொண்டேன். கடவுளின் அன்பைப் பெற நமது பாவம் அனைத்தையும் விட்டொழிப்பதே உண்மையான விசுவாசத்தின் தன்மை. இது எவ்வளவு நேர்த்தியானது. நம்முடைய ஒவ்வொரு பாவச்செயலுக்கும் தீர்ப்பளிக்கப்பட்டு வேதனையை அனுபவிக்க வேண்டும். ஆனால் ஆண்டவரோ நிபந்தனையற்ற மன்னிப்பை சமாதானத்தையும் வழங்குகிறார்.

நாம் மனந்திரும்பி, விசுவசத்தால், நமதாண்டவர் இதயத்திலிருந்து இலவசமாக கிடைக்கும் இரக்கத்தை நாம் ஏற்றுக்கொண்டிருந்தால், நம்மைச் சுற்றியுள்ள உலகில் கிறிஸ்துவை நாம் பார்த்திருந்தால், சாத்தானின் தந்திரத்தை முறியடிக்க நமது வலிமையை அவரிடமிருந்து பெற்றிருப்போம்.

தவக்காலத்தில் நாம் மேற்கொள்ளும் விரதம், நமது பாவத்திற்குத் தண்டனை அல்ல, மாறாக கடவுள் மீதான நமது மனத்துணிவை வலுப்படுத்தும் ஆயுதம். கடந்த காலத்தில் நாம் செய்த காரியத்திற்கு ஈடுகட்டுவதல்ல தவம்; மாறாக தீயில் தங்கம் புடம் போடப்படுவது போல, விசுவாசத்தில் உறுதிப்படவே. தங்களது பாவச் சுமைக்கு, எங்கே தண்டனை தீர்ப்பைக் கிடைத்து விடுமோ என எண்ணி பலர் கிறிஸ்துவிடமிருந்தும் திருச்சபையிடமிருந்தும் ஒதுங்கி இருக்கின்றனர். இந்த காலம் வழங்கும் நம்பிக்கையை துய்த்துணரஅவர்கள் தவறி விடுகின்றனர். இன்றும் என்றும் இயேசு இந்த நம்பிக்கையை வழங்குகிறார். சாத்தானைச் சந்தித்து வெற்றிவாகை சூட்டிய இயேசு, சாத்தானின் சக்தியையும் மனித பலவீனத்தையும் அறிவார். நம்மை கண்டிப்பதற்காக அவர் மனமாறச் சொல்லவில்லை. பாலைநிலத்திலிருந்து வெளியேறும் வழியைக் கற்பிப்பதற்காக இயேசு நம்மை மனமாற அழைக்கிறார்.

‘ஆண்டவர் கூறுகிறார், தீயோர் சாக வேண்டுமென்பது என் விருப்பம் அன்று; அத்தீயோர் தம் வழிகளினின்று திரும்பி, வாழ வேண்டும் என்பதே என் விருப்பம்’ (எசே. 33:11) என்ற தவக்கால மதியம் செபத்தில் நாம் பாடுகிறோம். எனவே, ஆண்டவரை நோக்கி, தவச்செயல்களால் நொருங்கிய உள்ளத்தோடும் இரக்கம் கொண்ட இதயத்தோடும் நாமும் திரும்புவோம். அவரே, உலகம் எனும் பாலைநிலத்திலிருந்து நித்திய வாழ்விற்கு வழிகாட்டி நம்மை அழைத்துச் செல்வார். ✝


**INTERNAL CIRCULATION ONLY**

BUL 07/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd

*Design:* The Mustard Seed Studio



எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

18 பெப்ரவரி 2018

தவக்காலம் 1ம் ஞாயிறு




# மீட்பளிப்பவரிடம் திரும்பி செல்வதே நம்பிக்கை

## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்


*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2018 பெப்ரவரி (மாசி) மாதத்தின் கருப்பொருள்:*

***ஒருமிக்க நாம் கிறிஸ்துவில் குணமடைகிறோம்***

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***

***( 1848 – 2018 )***

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: தவக்காலம் 1ஆம் ஞாயிறு: (ஆண்டு இரண்டு) சனி 17-02-2018 ஞாயிறு 25-02-2018**

தொ.நூ 9: 8-15, 44-45 தி.பா 24: 4-5ab, 6-7bc 8-9 1 பேதுரு 3: 18-22 மாற்கு 1: 12-15

**ஆண்டவரது உடன்படிக்கையைக் கடைப்பிடிப்போரின் பாதைகள் உண்மையானவை ( தி. பா 24 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 17 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித டொமினிக்) | **மாலை 7.00 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 18 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (முகிபுவ)<br>திருப்பலி (ஆங்கிலம்) (ம.கல்வி – படிவம் 1)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த / ஆ / தே.மொ / சீ) நடைபெறாது**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 19 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 20 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 21 | கா.திருப்பலி நடைபெறாது | | **குருக்களின் மாதாந்திர தியானம் APC கோலாலும்பூர்** |
| வியா | 22 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 23 | கா.திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.00 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும் தொடர்ந்து திருப்பலியும் (ஆ / த /சீ /தே.மொ)*** |

**தவக்காலம் 2ஆம் ஞாயிறு: ( ஆண்டு இரண்டு)**

தொ.நூ 22: 1-2, 9a, 10-13, 15-18 தி.பா 115: 10 et 15, 16 – 17, 18-19 உரோ 8: 31b-34 மாற்கு 9: 2-10

**உயிர் வாழ்வோர் நாட்டில், நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன் ( தி. பா 115 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 24 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித தெரேசா – கல்கத்தா) | |
| ஞாயிறு | 25 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா | திருப்பலி (தமிழ்) (புனித யூட்)<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு.லொறென்ஸோன் றூய்ஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>**திருப்பலி (தே.மொ) நடைபெறாது** | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் )<br>**மா 3.00 மணி கிறிஸ்தவ புகுமுக வேட்பாளர்களின் தேர்வுச் சடங்கு – காஜாங்** |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் புதிய பங்கு **மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித யூதா ததேயு அதிச மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 பெப்ரவரி (மாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) பங்கு ஆலய காணிக்கை
10/11 பெப்ரவரி 2018 - ரிம: 8,668.15 தித்தி: ரி.ம :105.00
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

- **மினவுதல் தேவாலய வின்சென்ட் டி போல் இயக்கத்தினர்:** ஏழைகளுக்கும், உதவி தேவைப்படுவோர்க்கும் ஆர்வத்தோடும் பணி செய்ய இன்னும் அதிகமான தன்னார்வலர்களைத் தேடுகின்றனர். உங்களுக்கு ஆர்வமிருந்தால் பங்கு அலுவலகம் அல்லது லூயிஸ் (019-622 7440) அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள் இவர்களின் பணிக்கூட்டம் மாதத்தின் முதல் செவ்வாய் அன்று மாலை 4-6 மணி வரை ஆலய உணவு விடுதியில் நடைபெறும்.

- **சீனப்பெரு நாள் மதிய விருந்து** மார்ச் 04, 2018(ஞாயிறு) பகல் 12.30 இடம்: மின் கோக் உணவு விடுதி. டிக்கெட்டுகள் ஒரு நபருக்கு ரிம:50/- தொடர்புக்கு : டோரீன் 017-332 6007
- **2018 தவக்காலத்தில் ஒப்புரவு அருளடையாளக் கொண்டாட்டம்**

பிப்ரவரி 19 (திங்கள்) இரவு 8.00 மணி: உயிர்த்த கிறிஸ்து ஆண்டவர் ஆலயம், ஜலான் ஈப்போ
பிப்ரவரி 20 (செவ்வாய்) இரவு 8.00 மணி: கிறிஸ்து ஒளி ஆலயம், கெப்போங்
பிப்ரவரி 26 (திங்கள்) மாலை 7.30 மணி: பாத்திமா அன்னை ஆலயம், பிரிக்பீல்ட்ஸ்
மாலை 7.00 மணி: புனிததிரேசா ஆலயம், நீலாய்
பிப்ரவரி 27 (செவ்வாய்) மாலை 6.45 மணி: புனித அந்தோணியார் ஆலயம், கோலாலம்பூர்
**பிப்ரவரி 27 (செவ்வாய்) மாலை 7.00 மணி: மினவுதல் மாதா தேவாலயம், சிரம்பான்**

- **ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருப்போம்** சுவர்களில் ஆணி அடித்தல், பசை சுவரொட்டிகள் ஒட்டுதல், ஆகியவற்றைத் தவர்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம். ஆலயம் இறைவன் தங்கும் இல்லம், எனவே எப்போதும் தூய்மையைக் கடைப்பிடிப்பது நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை உறுதி செய்வோம்.
- **கத்தோலிக்க திருமண முன் தயாரிப்புப் பயிற்சி ( CMPC) (மூன்று நாள் பயிற்சி)**

ஆங்கிலம் 27- 29 ஏப்ரல் 2018 (கோலாலம்பூர்)
தமிழ் 25 - 27 மே , 2018 (கோலாலம்பூர்)
தேசிய மொழி 23 - 25 பிப்ரவரி, 2018 (கோலாலம்பூர்)
சீனம் 20 - 22 ஏப்ரல், 2108 (கோலாலம்பூர்)

- **தவக்காலத்தில் உணவைத் தவிர்க்கப் போகின்றீர்களா? (திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வார்த்தை)**
  - காயப்படுத்தும் வார்த்தைகளை தவிர்த்து கனிவான வாத்தைகளைப் பேசுங்கள்
  - சோகத்தைத் தவிர்த்து நன்றியால் நிறைவடையுங்கள்
  - கோபத்தைத் தவிர்த்து பொறுமையினைக் கடைப்பிடியுங்கள்
  - நம்பிக்கையின்மையைத் தவிர்த்து நம்பிக்கை கொள்ளுங்கள்
  - கவலைப்படுவதை தவிர்த்து கடவுளை நம்புங்கள்
  - குறை சொல்வதை தவிர்த்து எளிமையை நாடுங்கள்
  - மன அழுத்தத்தைத் தவிர்த்து செபத்தில் ஈடுபடுங்கள்
  - கசப்புணர்வைத் தவிர்த்து, உங்கள் இதயங்களை மகிழ்ச்சியால் நிரப்புங்கள்
  - சுய நலத்தைத் தவிர்த்து பிறரிடம் இரக்கத்தோடு நடந்து கொள்ளுங்கள்
  - வஞ்சத்தைத் தவிர்த்து ஒப்புரவாகுங்கள்
  - வார்த்தைகளைத் தவிர்த்து, அமைதியோடு செவிகொடுங்கள்
- **இந்த தவக்காலத்தில் நான் என்ன செய்யமுடியும்?**
  - 2018 ஆம் ஆண்டின் தவக்காலச் செய்தியை வாசிக்கவும்.
  - அகப்பக்கத்திற்குச் சென்று கூடுதல் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள் (lent.aohd.org) (www.facebook.com/Lenten campaign)
  - நல்ல தயாரிப்பான ஒப்புரவைச் செய்யுங்கள்
  - சிலுவைப் பாதை பக்தி முயற்சியை மேற்கொள்ளுங்கள்
  - குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் விசுவாசிகள் அனைவரும் தவக்கால முயற்சி நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள அழைக்கப்படுகின்றீர்கள். கூடுதல் விவரங்களுக்கு மறைக்கல்வி ஆசிரியர்கள், இளைஞர் குழு பொறுப்பாளர்கள் அதிச/வட்டார பொறுப்பாளர்களை அணுகவும்.
- **ஆங்கில பாடல் குழுவினர்** ஆர்கன் இசைக்கருவி வாசிப்பவர்களை சனி 6.00 மணி திருப்பலி மற்றும் ஞாயிறு 9.00 மணி திருப்பலிக்கு உங்களை அழைக்கிறார்கள். ஆர்வமுள்ளோர் தொடர்புக்கு அமாண்டா (சனிக்கிழமை) 016- 367 3049 / எட் ரியன் (ஞாயிறு) 9.00 திருப்பலி 010 897 0642
- **கிறிஸ்துவ புகுமுக வேட்பாளர்களின் தேர்வுச் சடங்கு** - பிப்ரவரி 25, 2018 (ஞாயிறு) பகல் 2.00 மணிக்கு திருக்குடும்ப தேவாலயம், காஜாங் இவர்களை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்
- **கிறிஸ்துவ புகுமுக வேட்பாளர்களின் தியானம்** (ஆங்கிலம் & தேசிய மொழி) மார்ச் 10-11 போர்ட்டிக்சனில் நடைபெறும். இவர்களுக்காக நாம் செபிப்போம்.
- **திருவழிபாட்டுக் குழு (தமிழ்) ஒன்றுகூடல் 23-02-2018** (வெள்ளி) மாலை 8.15 மணிக்கு, விவிலிய அறை. அனைத்து தமிழ் அதிச பொறுப்பாளர்கள் மற்றும் ஆலய பணிக்குழு தலைவர்கள் அனைவரையும் இதில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்
- **தமிழில் முதல் முறையாக விவிலிய-இறையியல் உருவாக்கப் பயிற்சி** நாள்: 10-03-2018 நேரம்: காலை 9.00 - 4.00 வரை இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம். கட்டணம் ரிம:20.00 தொடர்புக்கு: ரீத்தா சேவியர் (012 918 1620) - விவிலியப் பணிக்குழு

- **மறைமாவட்ட தேவ அழைத்தலுக்கான விழிப்புணர்வு 2018** - தேவ அழைத்தலுக்கான் முகாம் பிப்ரவரி 24-25 ஆகிய தேதிகளில் ஸ்தாப்பாக், நல்லாயன் தேவாலயத்தில் நடைபெறுகிறது. வயது: 18-35 வயதுவரை உள்ள ஆண்கள்: தொடர்புக்கு மறைதந்தை ஜோர்ஜ் & மறைதந்தை அண்ட்ரு/அல்லது பங்கு அலுவகம்
- **மருத்துவ முகாம் 2018** - மார்ச் 18, - காலை 8.00 - பகல் 3.00வரை - மினவுதல் தேவாலய மண்டபம்
- **மரியாயின் சேனை** (லிஜியோ மரி) மார்ச் 18, 2018 பகல் 2.30 (ஆலயத்தில்)